மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடுதல் அபிவிருத்தித் திட்டத்தின் வாயிலாக நாகப்பட்டினத்தில் மூன்று இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெளிவுபடுத்தியிருந்தேன். சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளி அருகில் என்று சொல்கிறபோது, அந்த மூன்று இடங்களில் ஒன்று சாலமன் பார்க்கிலும், வெளிப்பாளையம் என்ற இடத்திலும், நாகூரில் இருக்கிற வண்டிப்பேட்டை என்ற இடத்திலும் ஆகும். சாலமன் பார்க் என்று சொல்லப்படுகின்ற இடம், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கின்ற அந்த சி.எஸ்.ஐ. மேல்நிலைப் பள்ளி என்ற இடத்திலிருந்து 200 மீட்டர் தொலைவில் தான் உள்ளது. ஆகவே, அந்த இடமே போதுமானதாக இருப்பதாக நிபுணர்கள் கருதுவதால், அந்த இடத்தையே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தேர்வு செய்திருக்கிறது. உறுப்பினர் கூறியிருக்கின்ற கருத்தின் மீது அறிக்கை பெறப்பட்டு, சாத்தியக்கூறு இருப்பின், மாற்றியமைக்கக் கூடிய நிலை நல்லவையாக அமையும் என்று சொன்னால், அதையும் அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 19, டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

தீண்டாமை ஒழிய பொது விருந்துகள் (Inter-Caste Dinner) நடத்த ஊக்குவித்தல்.

19—

* 11867—டாக்டர் அ. ஸ்ரீதரன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டாமை தமிழ்நாட்டில் அடியோடு ஒழிய பொது விருந்துகளுக்கு (Inter-Caste Dinner) ஊக்கம் அளிக்க விழிப்புணர்ச்சி முகாம் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

1993 அக்டோபர் 26]

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமத்துவத்தையும் சமுதாய மறுமலர்ச்சியையும் நீரூற்றி வளர்த்து வருகின்ற நல்லெண்ணம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில், தீண்டாமை ஒழிப்பிற்காகக் கடன்களும் மானியங்களும் தங்கப் பதக்கங்களும் பட்டயங்களும் கொடுப்பதைப் பாராட்டி, அதே நேரத்தில் அண்ணல் அம்பேத்கார் அவர்கள் சொன்னதைப் போல, என்றைக்கு மேல்சாதிக்காரர்கள் கீழ்ச்சாதிக்காரர்கள் வீட்டுக்கு விருந்துக்கு வருகிறார்களோ, அதேபோல் மேல்சாதிக்காரர்கள் வீட்டுக்கு என்றைக்கு கீழ்ச்சாதிக்காரர்களை விருந்துக்கு அழைக்கின்ற மனப்பான்மை வருகிறதோ அன்றைக்குத்தான் நமது நாட்டில் தீண்டாமை முற்றிலும் ஒழிக்கப்படும் என்று சொல்கிற அந்தக் கோட்பாடுப்படி, அந்த நாள் இந்த நாள்தான் என்று சொல்கிற அளவுக்கு நம்முடைய அரசு திட்டங்களைச் செயல்படுத்துமா? அவ்வாறு செயல்படுத்தும் என்றால் அது எவ்வகை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி எங்கள் இதயதெய்வம் அவர்கள், ஆதிதிராவிட மக்களுடைய ஏற்றத் தாழ்வைப் போக்கவேண்டுமென்ற உன்னத நோக்கோடுதான் ஆதிதிராவிட சமுதாய மக்கள் பொருளாதாரத்தில் உயரவேண்டும் என்பதற்காகத் தொழிற்பேட்டைகளும், ஆதிதிராவிட சமுதாய மாணவர்கள் கல்வித் தரத்தில் உயர்ந்தால்தான் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் தனிக்கவனம் செலுத்தி, ஆதிதிராவிட மாணவ மாணவியர்கள் இந்தத் துறை உண்டான காலந்தொட்டு ஏற்படாத வளர்ச்சியாக புரட்சித்தலைவி இதயதெய்வம் காலத்தில்தான் பத்தாம் வகுப்பில், அதாவது எஸ்.எஸ்.எல். சி. யில் 70 விழுக்காடும், பிளஸ் 2-ல் அதாவது பன்னிரண்டாம் வகுப்பில் 62 விழுக்காடும் எட்டியிருக்கிறது என்று சொன்னால், இதுவே ஆதிதிராவிட மக்களின் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவதற்குக் கருத்துருவாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிட மக்களும் தொழிலதிபர்களாக வரவேண்டும் என்று, சமுதாயத்தில் அந்தஸ்து பெற வேண்டுமென்று, திட்டங்களைத் தீட்டிய நமது ஆட்சியில், கிராமப் புறங்களில் - நகர்புறங்களில் ஓரளவுக்கு தீண்டாமை ஒழிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றாலும், அதே நேரத்தில் கிராமப் புறங்களில் அதுபோன்றக் குறைகள் இருக்கின்ற காரணத்தால், அங்கே சாதிச்சண்டைகள் போன்றவை வருகின்ற காரணத்தால், அங்கே சட்டம் ஒழுங்கைக் காப்பதற்காகவும்

சமத்துவத்தையும், சமுதாய மறுமலர்ச்சியையும் பேணிக் காக்கின்ற வகையிலும், கிராமப் புறங்களில் இத்திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத்தில் இருக்கின்ற ஆதி திராவிடர் குழந்தைகள் கல்வித் தரத்தில் முன்னுக்கு வர வேண்டுமென்பதற்காக ஒரு ஆய்வு நடத்த அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆதிதிராவிட குழந்தைகள் நன்றாகப் படிக்க வேண்டும். அதுபோல ஆதிதிராவிட சமுதாய மக்களுக்குக் குடிநீர், சாலை வசதி, மின் விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென்று அக்கறை கொண்டு, மிகத் தீவிரமாக இந்த அரசு செயல்பட்டுக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 20, திரு. பி. வி. இராஜேந்திரன். மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

20—

வெள்ளப் பள்ளத்தில் மீன்பிடித் துறைமுகம் மற்றும் வழிகாட்டி விளக்கு வசதி ஏற்படுத்துதல்.

* 21195—திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வேதாரண்யம் தொகுதி, வெள்ளப்பள்ளம் கிராமத்தில் மீன்பிடி துறைமுகம், வழிகாட்டி விளக்கு வசதியை மீளனத் துறை மூலம் ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,